பத்திரிக்கைச்செய்தி

பட்டதாரிகளுக்கான தொழில் முனைவோர் பயிற்சி

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் குறு மற்றும் சிறு தொழில் வளர்ச்சிக்கும், தொழில் முனைவோரை உருவாக்கவும் முறையான பயிற்சி திட்டங்களின் வாயிலாக செயலாற்றி வருகிறது. தமிழகம் முழுவதும், வேலையில்லாபட்டதாரி இளைஞர்களுக்கும், தொழில் முனைவோராக ஆகவேண்டும் என்ற குறிக்கோளுடையவர்களையும் தேர்வு செய்து பயிற்சிகளை அளித்துவருகிறது. குறிப்பாக பொறியியல், கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் மற்றும் இதர பொறியியல் பட்டய படிப்பாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கி அரசின் நிதியுதவி திட்டங்களின் மூலம் சொந்தமாக தொழில் துவங்க உதவி வருகிறது.

இந்த ஆண்டில் பட்டதாரிகளுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுபயிற்சியை எங்கள் நிறுவனத்தில் ஆகஸ்டு 22 ஆம் நாள் முதல் ஒரு மாத காலம் நடத்த உள்ளோம். சுய தொழில் மற்றும் தொழில் முனைவோர்க்கான கீழ்க்காணும் அம்சங்களை இப்பயிற்சி உள்ளடக்கியதாகும். (அ) தொழில் பற்றிய திட்டம், உற்பத்தி பொருள் வாய்ப்புகளை கண்டறிதல். (ஆ) சிறு தொழில்களை அமைக்க வழி முறைகளை விளக்குதல். (இ) திட்ட அறிக்கை தயாரித்தல். (ஈ) புதிய தொழில் முனைவோர்க்கான நிதி உதவிகள், மானியங்கள் பற்றி அரசு துறை அதிகாரிகள், வங்கி மற்றும் நிதி நிறுவன அதிகாரிகள் மூலம் விளக்கமளித்தல். சிறிய மற்றும் குறுந் தொழிகளில் தகுதி வாய்ந்த தொழில் ஆலோசகர்கள் தணிக்கை அதிகாரிகள், வெற்றிபெற்ற தொழில் முயற்சியாளர்கள் இவர்களை பங்குபெறச் செய்து அவர்களின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்க ஆவன செய்யப்படும்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளோர் ஆகஸ்டு 17 ஆம் நாள் காலை 10 மணிக்கு கிண்டி ஜி எஸ் டி சாலை, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் நடக்க உள்ள கலந்தாய்வில் பங்கேற்க வேண்டும். பயிற்சியின் நோக்கம், பயன், கட்டணம், பயிற்சி நேரம் ஆகிய விபரங்களை அறிந்துகொள்ளலாம். இந்த கலந்தாய்வுக்கு கட்டணமில்லை. தகுதியுள்ள 30நபர்களே ஒரு மாத பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர். தொடர்புக்கு திரு ஆர்.வி.சுப்ரமணியன் - போன் 2250 2412∴87545 90965.

---

கூடுதல் தலைமைசெயலாளர் மற்றும் இயக்குனர், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை அவர்களின் ஒப்புதலுடன் இச்செய்திக் குறிப்பு வெளியிடப்படுகிறது.